பக்கங்கள்:-19

# காலை முரசு

முழக்கம்: 01 | வள்ளுவர் ஆண்டு 2054 | மார்கழி 08 | ஞாயிற்றுக்கிழமை | 24.12.2023 | அதிர்வு 145

## வாகன விபத்துக்களில் இரு சிறுமிகள் மரணம்

நாட்டில் நேற்று வெவ்வேறு இடங்களில் இடம்பெற்ற வாகன விபத்துக்களில் இரண்டு சிறுமிகள் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளனர்.

கம்பஹா மாவட்டம், நீர்கொழும்பு பிரதேசத்தில் கார் ஒன்றும் ஓட்டோ ஒன்றும் மோதியதில் ஓட்டோவில் பயணித்த 06



# ஜனாதிபதித் தேர்தலில் ரணிலையே தமிழ்க் கட்சிகள் ஆதரிக்க வேண்டும்

## எதிர்மறையான தீர்மானம் எடுத்து வரலாற்றுத் தவறு இழைக்கக்கூடாது என்று அமைச்சர் ஹரின் வலியுறுத்து

ஜனாதிபதித் தேர்தலில் அனைத்து தமிழ்க் கட்சிகளும் ரணில் விக்கிரமசிங்கவை ஆதரிக்க வேண்டும் என்று அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ கோரிக்கை விடுத்துள்ளார். தமிழர்கள் சார்பில் பொது வேட்பாளர் என்று எதிர்மறையான முடிவைத் தமிழ்க் கட்சிகள் எடுத்து வரலாற்றுத் தவறு இழைக்கக்கூடாது என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார். 06



# 3 பிரதான கட்சிகளின் வேட்பாளர்கள் தயார்



தென்னிலங்கையில் உள்ள மூன்று பிரதான கட்சிகள் இதுவரை தமது கட்சிகளின் சார்பில் ஜனாதிபதித் தேர்தலில் களமிறங்கும் வேட்பாளர்களை அறிவித்துள்ளன. அத்துடன், சில சிறுகட்சிகளும் ஜனாதிபதித் தேர்தலில் தமது கட்சி வேட்பாளர் 04




விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவரும், இந்திய நாடாளுமன்ற உறுப்பினருமான தொல்.திருமாவளவன் இலங்கை வந்துள்ளார்.

திருச்சியில் இருந்து நேற்று இரவு விமானத்தில் கொழும்பை வந்தடைந்த அவர், நேற்று இரவு வாகனத்தில் கண்டியைச் சென்றடைய இருந்தார்.

இன்று காலை நுவரெலியாவில் மனோ கணேசன், இராதாகிருஷ்ணன் அணியினர் நடத்தும் 'மலையகம் – 200' நிகழ்வில் 06

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம் - Bonding Tamils Globally




# 100 ஆவது நாளாக பண்ணையாளர்கள் போராட்டம் நாடாளுமன்ற உறுப்பினர்களும் நேற்று இணைவு

(பழுவூரான்)

மட்டக்களப்பில் போராட்டத்தில் ஈடுபடும் மேய்ச்சல் தரையாளர்களுடன் நாடாளுமன்ற உறுப்பினர்களும் நேற்று இணைந்து போராட்டத்தில் ஈடுபட்டனர்.

100ஆவது நாளான நேற்றைய போராட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்களான இராசமாணிக்கம் சாணக்கியன், கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செல்வராசா கஜேந்திரன் மற்றும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான பா.அரியநேத்திரன், ஞா.ஸ்ரீநேசன், சீ.யோகேஸ்வரன், ஈரோஸ் ஜனநாயக முன்னணியின் உறுப்பினர்கள், சமூகச் செயற்பாட்டாளர்கள் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

மக்களின் பிரச்சினைக்கான தீர்வு உடனடியாக எட்டப்பட வேண்டும் என்று இதன்போது நாடாளுமன்ற உறுப்பினர்கள் கருத்துத் தெரிவித்தனர்.

இந்தப் போராட்டத்தில் கலந்துகொண்ட ஈரோஸ் ஜனநாயக முன்னணியின் உறுப்பினர்கள், பிரதான வீதியூடாகப் பயணித்த மக்களுக்கு மேய்ச்சல் தரைப் பிரச்சினை தொடர்பாக தம்மால் வெளியிடப்பட்ட துண்டுப் பிரசுரத்தை விநியோகித்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.









# திருகோணமலையின் அடர்ந்த வனப்பகுதியில் புராதனமான சிவாலய இடிபாடுகள் கண்டுபிடிப்பு

## பொலநறுவையை ஒட்டிய எல்லையில் மகாவலி நதிக்கரையில்















**(எஸ்.கீதபொன்கலன்)**

திருகோணமலையில், இதுவரை அறியப்படாத – புராதனமான – சிவாலய இடிபாடுகள் புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

வரலாற்று ஆய்வாளர் மருத்துவர் அருமைநாதன் சதீஸ்குமார் மற்றும் அவரது நண்பர்களின் முயற்சியில் திருகோணமலையில் இதுவரை அறியப்படாத இந்தச் சிவாலய இடிபாடுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

திருகோணமலை நகரிலிருந்து சுமார் 5 மணித்தியால பயணத்தின் பின்னர் அடர்ந்த வனப்பகுதியில் வவுளாமடு என்னுமிடத்தில் அத்திபாரமட்டத்தில் இடிந்த நிலையிலுள்ள சிவன் கோயில் எச்சங்கள் காணப்படுகின்றன.

அதைவிட ஆங்காங்கே சிதைக்கப்பட்ட நிலையில் இரண்டு சிவலிங்கங்கள், கருங்கற் பொழிவுகள், பாரிய கருங்கற்றூண்கள், கருங்கல் மேடை, தூண்தாங்கு கற்கள் என்பனவும் இப்பகுதியில் உள்ளன.

பயணத்தின் போது ஆங்காங்கே காட்டு யானைகளின் நடமாட்டத்தை அதிகளவில் அவதானிக்க முடிந்தது. இவ்விடம் மாவில் ஆற்றுக்கு அப்பால் சின்னவில், அதற்கும் அப்பால் பொலநறுவையை ஒட்டிய எல்லையில் மகாவலி நதிக்கரையில் அமைந்துள்ளது.

யானைகளுக்கு தப்பி இவ்விடத்தை அடைந்து, ஒரு மணித்தியால தேடலுக்குப் பின்னரே இச்சிவாலய இடிபாடுகள் கண்களில் பட்டது.

இக்கோயில் சுற்றாடலில் மக்கள் குடியிருப்புகள் இருந்ததற்கான அடையாளங்கள் பெருமளவில் காணப்படுகின்றன.

# மியான்மாரில் கடத்தப்பட்ட இலங்கையர்களை பாதுகாப்பாகத் திருப்பி அனுப்ப நடவடிக்கை



மியான்மாரில் அண்மையில் கடத்தப்பட்ட இலங்கையர்களைப் பாதுகாப்பாக திருப்பி அனுப்புவதற்கு அவசியமான ஒத்துழைப்புக்களை வழங்குமாறு இலங்கை அரசு, மியான்மார் அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

இது குறித்து அறிக்கையொன்றை வெளியிட்டிருக்கும் வெளிவிவகார அமைச்சு, கடந்த 2022 ஆம் ஆண்டு முதல் மியன்மாரில் சைபர் குற்றங்களில் ஈடுபடுத்துவதற்கென ஆட்கடத்தல் கும்பலால் இலங்கையர்கள் கடத்தப்படும் சம்பவங்கள் பதிவாகி வருகின்றன என்று தெரிவித்துள்ளது.

அதேவேளை முன்னதாக மியன்மார் அரச அதிகாரிகளுடன் அந்நாட்டிலுள்ள இலங்கைத் தூதரகம் இணைந்து முன்னெடுத்த மீட்பு நடவடிக்கைகளை அடுத்து, 2022 - 2023 இற்கு இடைப்பட்ட காலத்தில் பாதிக்கப்பட்ட 32 இலங்கையர்கள் மீட்கப்பட்டனர்.

அதேபோன்று வெளிவிவகார அமைச்சுக்குக் கிடைக்கப்பெற்ற தகவல்களின்படி, மியன்மாரின் மியாவாடி பகுதியில் தற்போது 56 இலங்கையர்கள் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறானதொரு பின்னணியில் மியன்மார் அரசு மற்றும் புலம்பெயர்வுக்கான சர்வதேச அமைப்பு ஆகியவற்றுடன் இணைந்து, தடுத்துவைக்கப்பட்டுள்ள இலங்கையர்களை மீட்பதற்கு அவசியமான அனைத்து நடவடிக்கைகளையும் முன்னெடுத்து வருவதாக இலங்கை அரசு தெரிவித்துள்ளது.

## 3 பிரதான கட்சிகளின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

போட்டியிடவுள்ளதை உறுதிப்படுத்தியுள்ளன.

பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி – கூட்டணியின் ஜனாதிபதி வேட்பாளராக சஜித் பிரேமதாஸ களமிறங்குவார் என்றும், இதுவே கட்சியின் உறுதியான நிலைப்பாடு என்றும் நாடாளுமன்ற உறுப்பினர் கபீர் ஹாசீம் தெரிவித்தார்.

ஜே.வி.பி. தலைமையிலான தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளராக அநுரகுமார திஸாநாயக்கவை களமிறக்குவதற்கு அக்கட்சியின் நிறைவேற்றுக் குழு முடிவெடுத்துள்ளது.

அத்துடன், தமது கட்சி வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்க எனவும், அவர் பொது வேட்பாளராக களமிறங்குவார் எனவும் ஐக்கிய தேசியக் கட்சி அறிவித்துள்ளது.

பிரதான அரச பங்காளிக் கட்சியான ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன ஜனாதிபதித் தேர்தல் குறித்து இறுதியான – உறுதியான முடிவை இன்னும் எடுக்கவில்லை. வடக்கு, கிழக்கில் செயற்படும் தமிழ்த் தேசியக் கட்சிகளும் தேர்தல் தொடர்பில் முடிவெடுக்கவில்லை.

அதேவேளை, நவநசமாஜக் கட்சி, ஐக்கிய சோசலிசக் கட்சி உட்பட சில சிறு கட்சிகளும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் முடிவை எடுத்துள்ளன.

### இலங்கையர் கடத்தல் விவகாரம்;

## சீனப் பிரஜை உட்பட மூவர் நேற்று கைது!

(ந.லோகதயாளன்)

இலங்கையில் இருந்து 56 பேரை மியன்மாருக்குக் கடத்திய குழுவின் முக்கிய சூத்திரதாரியாக இருந்த சீனப் பிரஜை உட்பட மூவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இலங்கையில் இருந்து கடத்திச் செல்லப்பட்டனர் என்று சந்தேகத்தேகிக்கப்படும் 56 பேர் உள்ளிட்ட 300 வரையானோரை ஒரு குழு சித்திரவதை புரிவதோடு அங்கிருந்த நான்கு இலங்கையர் தப்பி வந்ததான செய்தி வெளிவந்த நிலையில், அவர்களை இலங்கையில் இருந்து கடத்தியதாக நேற்று பொலிஸாரால் கொழும்பில் வைத்து மூவர் கைது செய்யப்பட்டனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட மூவரில் சீனப் பிரஜை ஒருவரும் அடங்குகின்றார் என்று பொலிஸார் அறிவித்திருப்பது பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.







# ஹெல்மட் இன்றி ‘பறந்தவர்களை’ பொலிஸ் துரத்தியபோது விபத்து!

## யாழ் நகரில் நேற்று மாலை சம்பவம்





தலைக்கவசம் அணியாமல் மோட்டார் சைக்கிளில் பயணித்த இரண்டு இளைஞர்கள் பொலிஸாரிடமிருந்து தப்புவதற்காக வேகமாக சென்றபோது காருடன் மோதுண்டு விபத்துக்குள்ளாகினர்.

யாழ்ப்பாணம், பலாலி வீதி, கந்தர்மடம் சந்தியில் இந்த விபத்துச் சம்பவம் நேற்று சனிக்கிழமை மாலை இடம்பெற்றது.

காயமடைந்தவர் சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இது குறித்து மேலும் தெரியவருவதாவது:-

யாழ்ப்பாணம், நல்லூர் பகுதியில் போக்குவரத்துப் பொலிஸார் கடமையில் ஈடுபட்டிருந்த போது அவ்வீதியில் இரண்டு இளைஞர்கள் தலைக்கவசம் அணியாது மோட்டார் சைக்கிளில் சென்றுள்ளனர்.

இதனை அவதானித்த போக்குவரத்து பொலிஸார் இரண்டு இளைஞர்களும் பயணித்த மோட்டார் சைக்கிளைத் துரத்திச் சென்றனர்.

பொலிஸாரிடமிருந்து தப்பித்துச் செல்வதற்காக அதி வேகத்தில் பயணித்த மோட்டார் சைக்கிள் கந்தர்மடம் சந்தியில் பயணித்த காருடன் மோதுண்டு விபத்துக்குள்ளானது.

சம்பவ இடத்திலிருந்து மோட்டார் சைக்கிளில் பயணித்த ஒருவர் தப்பித்தோடிய நிலையில் மற்றொருவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

சம்பவம் தொடர்பாக யாழ்ப்பாணம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இலங்கைத் தமிழ் இலக்கிய நிறுவகம்
இலண்டன் தமிழ் இலக்கிய நிறுவகம்
இணைந்து



“தாயகஒலி” பிரதம ஆசிரியர்

*தம்பு சிவா அவர்களின் (தம்பு. சிவசுப்பிரமணியம்)*

(அகவை 80) அமுத விழாவை முன்னிட்டு

நடத்தும்

சிறுகதைப் போட்டி

இருபிரிவுகளாக நடத்தப்படும்

(பரிசுத் தொகை 1 இலட்சம்)

1. சிறுகதைப் போட்டி சகலருக்குமானது
2. பாடசாலை மாணவர்களுக்கான திறந்த போட்டி

* போட்டிக்கான படைப்புகள் அனைத்தும் சொந்தப்படைப்பாக அமைய வேண்டும். ஏற்கனவே வெளிவந்தபடைப்புக்கள் ஏற்றுக்கொள்ள படமாட்டாது.
* பாடசாலை மாணவர்களுக்கான ஆக்கப்படைப்புகள் யாவும் அப் பாடசாலை அதிபரால் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.
* 2024ம் ஆண்டு பெப்ரவரி 15ஆம் (15.02.2024) திகதிக்கு முன் படைப்புகளை அனுப்பி வைக்க வேண்டப்படுகின்றீர்கள்.
* நடுவர்களின் தீர்ப்பே இறுதியானது.

*அனுப்ப வேண்டிய முகவரி :*
இணைப்பாளர்
இலங்கைத் தமிழ் இலக்கிய நிறுவகம்
இல. 9 - 2/1 நெல்சன் பிளேஸ்
கொழும்பு 06.
தொடர்புகளுக்கு 0771 877 999, 011 2364124

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பங்கு பற்றிய பின்னர் இன்றிரவே அவர் திருச்சி திரும்புவார் எனத் தெரிய வருகின்றது. கொழும்பையும் மலையகத்தையும் தவிர வேறு எங்கும் இம்முறை அவர் செல்ல மாட்டார் எனத் தெரிகின்றது.

இன்றைய நுவரெலியா நிகழ்ச்சியில் வடக்குக் கிழக்கு தமிழர்கள் சார்பில் இலங்கைத் தமிழரசுக் கட்சி எம்.பியான சிவஞானம் ஸ்ரீதரன் பங்குபற்றுகின்றார்.

இன்றைய நிகழ்வில் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான சஜித் பிரேமதாஸ, இந்தியத் துணைத் தூதுவர் ஆகியோரும் பங்கு பற்றுகின்றனர்.

\+ + +

இது பண்டிகைக் காலம்.

பண்டிகைக் காலக் கொண்டாட்டங்கள், பார்ட்டிகளுக்கு போவோருக்குப் பொலிஸார் ஓர் அன்பு ஆலோசனை வழங்கியிருக்கின்றனர்.

இத்தகைய பார்ட்டிகளுக்கு செல்லும் போதும் திரும்பி வரும்போதும் சொந்த வாகனங்களைப் பயன்படுத்துவதைத் தவிர்த்து, வாடகை வாகனங்களை நேரத்துடனேயே ஒழுங்குபடுத்திப் பயன்படுத்துங்கள் என்பதுதான் பொலிஸாரின் அந்த ஆலோசனை.

பார்ட்டியில் கலந்து கொண்ட பின்னர், மது போதையில் சாரதி ஆசனங்களில் அமர்வதைத் தவிர்க்கச் செய்யவே இந்த வழிகாட்டலாம்.

பண்டிகைக் காலத்தில் போதையில் சாரத்தியம் செய்வோரின் எண்ணிக்கையும் எகிறி விடுகின்றது. விபத்துகளின் எண்ணிக்கையும் எகிறுகின்றது.

பண்டிகைக் காலத்தில் அதிகரிக்கும் போக்குவரத்து விபத்துகளை அடுத்து, இந்த ஆலோசனையை அன்புக் கட்டளையாக முன்வைக்கின்றனர் பொலிஸார்.

கடந்த நான்கு நாள்களில் மட்டும் போதையில் வாகனம் செலுத்திய 2,427 பேர் பொலிஸாரிடம் சிக்கியுள்ளனர். கவனயீனமாக வாகனங்களைச் செலுத்திய 232 சாரதிகளையும் பொலிஸார் மடக்கி உள்ளனர்.

\+ + +

பாதாள உலகக் கும்பல்கள், போதைப் பொருள் சம்பந்தப்பட்ட தரப்புகள் என்பவற்றுக்கு எதிரான போரை பதில் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னைக்கோன் தலைமையிலான பொலிஸார் திடுதிப்பென அறிவித்து ஆரம்பித்து விட்டனர்.

ஆனால், அதற்குத் தயாராக இல்லாத சிறைச்சாலைத் தரப்பு என்ன செய்வது என்று தெரியாமல் தலையைப் பிய்த்துக் கொண்டு அல்லாடுவதாகத் தெரிகிறது.

கிறிஸ்மஸ் பண்டிகையையொட்டி இந்த மூன்று நாளும் பொலிஸ் மற்றும் அதிரடிப்படையினர் மேற்படி ஒபரேஷன் செயற்பாட்டை இடைநிறுத்தியிருக்கின்ற போதிலும், அடுத்த மூன்று நாள்களில் அது மீண்டும் மும்முரமாகத் தொடரும் என்று கூறப்படுகின்றது.

பொலிஸாரின் இந்த ஒபரேஷனில் இதுவரை சுமார் 10 ஆயிரம் பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்களில் சிறு குற்றம் இழைத்த சந்தேக நபர்கள் சொந்தப் பெயரில் பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டாலும், பெரும்பான்மையான எஞ்சியோர் விளக்கமறியல் என்ற பெயரில் சிறைகளுக்குத் தான் அனுப்பப்பட்டு வருகின்றனர்.

ஏற்கனவே நாட்டில் உள்ள 30 சிறைச் சாலைகளும் நிரம்பி வழிகின்றன. சுமார் 13 ஆயிரம் கைதிகளை பராமரிக்கக் கூடிய இந்தச் சிறைகளில் இப்போதே முப்பதாயிரம் கைதிகள் உள்ளனர்.

பொலிஸாரினதும் அதிரடிப்படையினரதும் தற்போதைய ஒபரேஷனில் கைது செய்யப்பட்டோர் பெரும்பாலும் மோசமான குற்றச் சம்பவங்களுடன் தொடர்புபட்டவர்கள் அல்லது போதைப் பொருள் சம்பந்தப்பட்ட மற்றும் பாதாள உலகம் குழுவினர். பொலிஸ் நிலையங்களில் சில தினங்கள் தடுத்து வைக்கப்பட்டு விசாரிக்கப்பட்ட பின்னர் இவர்கள் விளக்கமறியல் கைதிகளாக சிறைச்சாலைகளுக்குத் தான் அனுப்பப்படுவர். இவர்களுக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் பாரதூரமானவை என்பதால் இவர்கள் – இப்போது – குறுகிய காலத்தில் சிறையில் இருந்து வெளியே வர மாட்டார்கள் என்பது திண்ணம். ஆயிரக்கணக்கில் சிறைக்குள் வந்து, நீண்ட காலம் தங்கப் போகும் இவர்களை எப்படி வைத்துப் பராமரிப்பது என்று தெரியாமல், ஏற்கனவே நிறைந்து வழியும் சிறைச்சாலைகளை நிர்வகிக்க முடியாமல் அல்லலுறும் சிறை அதிகாரிகள் முழுசுகின்றனர்.

கைதிகளும் பாவம். சிறை அதிகாரிகளும் பாவம். கடவுள்தான் இருதரப்பினரையும் காப்பாற்ற வேண்டும்!

## ஜனாதிபதித் தேர்தலில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

"ஜனாதிபதித் தேர்தல் அடுத்த வருடம் நடைபெற்றே தீரும். அந்தத் தேர்தலில் தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க போட்டியிடுவார் என்பதில் மாற்றுக் கருத்து இல்லை. அவர் ஐக்கிய தேசியக் கட்சி சார்பாக அல்லது பெரும்பாலான கட்சிகளின் இணக்கத்துடன் பொது வேட்பாளராகக் களமிறங்குவார்.

ஜனாதிபதித் தேர்தலில் அனைத்து தமிழ்க் கட்சிகளும் ரணில் விக்கிரமசிங்கவை ஆதரிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றோம்.

தமிழ்க் கட்சிகள், தமிழர்கள் சார்பில் பொது வேட்பாளரைக் களமிறக்கி தமிழ் மக்களின் வாக்குகளைச் சிதறடித்து வரலாற்றுத் தவறு இழைக்கக் கூடாது.

தமிழர்களுக்கு அரசியல் தீர்வைப் பெற்றுத்தரக் கூடிய ஒரே தலைவர் ரணில் தான். எனவே, அவரின் கரங்களைப் பலப்படுத்தத் தமிழர்களும், தமிழ்க் கட்சிகளும் முன்வரவேண்டும்." – என்றார்.

## வாகன விபத்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

5 வயது சிறுமி சம்பவ இடத்திலேயே சாவடைந்துள்ளார்.

உயிரிழந்த சிறுமியின் தாயாரும், ஓட்டோ சாரதியும் இந்த விபத்தில் படுகாயமடைந்துள்ளனர்.

அதேவேளை, இரண்டு மோட்டார் சைக்கிள்கள் நேற்று நேர் மோதி விபத்துக்குள்ளானதில் 8 வயது சிறுமி ஒருவர் உயிரிழந்துள்ளார். அத்துடன் மேலும் நான்கு பேர் காயமடைந்துள்ளனர்.

இந்த விபத்துச் சம்பவம் அநுராதபுரம் மாவட்டம், கலென்பிந்துனுவெவ பிரதேசத்தில் இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

உயிரிழந்த சிறுமி, தனது தாய் மற்றும் சகோதரருடன் மோட்டார் சைக்கிளில் பயணித்துக் கொண்டிருந்த போது மற்றுமொரு மோட்டார் சைக்கிள் மீது மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.



# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

## தமிழ்ப்

"முஸ்லிம் மக்கள் குறிவைக்கப்படுவது உறுதி. போர் முடிந்த கையுடன் குறிவைக்கப்பட்ட இனம்தாங்களேஎன்பதைமுஸ்லிம்மக்கள் விளங்கிக் கொள்ளவேண்டும். தமிழ்ப் பேசும் மக்களுடைய வடக்கு, கிழக்கு நிலப்பரப்பின் அடையாளத்தை மொழி என்ற அடிப்படையில் பாதுகாக்கத் தவறினால் அது முஸ்லிம் மக்களையும் சேர்த்துத்தான் அழிக்கும். எனவே மேய்ச்சல்தரை மக்களுடைய போராட்டம் ஒட்டு மொத்தமாக தமிழர்களுடைய போராட்டமாகவும், வடக்கு, கிழக்கு தமிழ்ப் பேசும் மக்களுடைய தாயகமாக அது பாதுகாக்கப்படுவதற்கு மிக மிக்கியமான புள்ளி என்பதையும் விளங்கி, அவர்களது (முஸ்லிம்களினது) பங்களிப்பும் இதில் எதிர்காலத்தில் அமைய வேண்டும்"

- இவ்வாறு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்திருக்கின்றார்.

பௌத்த - சிங்களப் பேரினவாத மேலாண்மையின்மிககொடூரமானஅடக்குமுறையை - ஆக்கிரமிப்பை - மேலாதிக்க வெறியை - எதிர்கொண்டிருக்கும் இலங்கைத் தீவின் சிறுபான்மைச் சமூகங்கள், பொது எதிரியான வலிமைமிக்க பேரினவாதத்தை முழுத் திராணியுடன் எதிர்கொள்வதற்கான நுட்பம் இந்த அழைப்புக்குள் உட்கிடையாக பொதிந்திருப்பது நோக்கப்பட வேண்டும்.

கிழக்கு மாகாணத்தில் தூரநோக்கற்ற சில தமிழ், முஸ்லிம் தலைவர்களின் குறுகிய, அரசியல் லாப நோக்கத்திற்கான செயல்பாடுகளினால் ஒட்டுமொத்த சிறுபான்மையினங்களுமே பேரவலத்தை எதிர்கொள்ள வேண்டிய ஆபத்து தீவிரமடைந்து வருகையில், அந்தப்பேரிடரில் இருந்து விடுபடுவதற்கான ஓர் ஆலோசனையாக - மதிநுட்பமான வழிகாட்டலாக - இந்த அழைப்பை கஜேந்திரகுமார் பொன்னம்பலம் முன் வைத்திருக்கின்றார்.

தத்தமது இனங்களின் வாக்குகளைச் சுருட்டித் தாம் அரசியல் பதவிகளை எட்டுவதற்காகக் கிழக்கில் தமிழ்ப் பேசும் இனங்களுக்கு இடையே - தமிழர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் இடையே - குரோதத்தையும் பகைமைத் தனத்தையும் தூண்டி வளர்த்து விடுவதில் இரு இனத்திலும் சில தலைவர்களும் தரப்புக்களும் மும்முரமாக இருக்கின்றனர்.

'நாங்கள் தமிழ் பேசும் இனங்கள், எங்கள் தாயகம் கிழக்கு மாகாணம்' - என்று கிழக்கில் உள்ள தமிழர்களும் முஸ்லிம்களும் ஒன்றித்து நின்றால் மட்டுமே, கிழக்கு தமிழ்ப் பேசும் தாயகமாக எஞ்சும். இல்லையேல் அதுவும் தென்னிலங்கைச் சிங்களத்தின்வழி பறி போய்விடும்.

கிழக்கில் நான் பெரிதா, நீ பெரிதா என்ற போட்டியில் தமிழ்ப் பேசும் மக்களாகிய தமிழர்களும் முஸ்லிம்களும் தங்களுக்குள் மோதிக் கொள்வதைத்தான் அந்தந்த இனம் சார்ந்த சில குறுகிய அரசியல்வாதிகளும், சிங்களப் பேரினவாதத் தலைவர்களும் முழு அளவில் விரும்புகின்றனர்.

அப்படிக் கிழக்கில் தமிழர்களும் முஸ்லிம்களும் தங்களுக்குள் மோதி, முரண்பட்டு, குழம்பி நின்றால்தான் இடையில் தாங்கள் புகுந்து, தங்கள் கைவரிசையைக் காட்டி, சிங்களக் குடியேற்றங்களை மேற்கொள்ளலாம், கிழக்கை பௌத்த - சிங்களப் பூமியாக மாற்றலாம் என்பது பேரினவாதிகளின் திட்டம்.

தமிழ் தேசியம் பேசுகின்ற கட்சிகள் பலவும் கிழக்கின் பிரதான இனமான முஸ்லிம்களையும் தமிழ்ப் பேசும் மக்களாக ஒன்றித்து அரவணைத்து, கூட்டுப் பயணம் செய்தால் மட்டுமே தமிழ்ப் பேசும் தாயகமாக கிழக்கைப் பாதுகாக்க முடியும் என்ற யதார்த்த நிலை புரிந்து கருமமாற்றுகின்றனர்.

அந்தப் பொறுப்புணர்வும் யதார்த்தமும் புரிந்த நிலையிலேயே தாமும் உள்ளார் என்பதை இந்த அழைப்பின் மூலம் வெளிப்படுத்தி இருக்கின்றார் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் எம்.பி.

அவர் கூறியமைப் போல பொத்துவில் முதல் பொலிகண்டி வரையான பேரணியில் தமிழர்களும் முஸ்லிம்களும் ஒன்றிணைந்து தமிழ்ப் பேசும் சமூகத்தின் கூட்டு முயற்சியாக அதை வெற்றிகரமாக முன்னெடுத்துச் சாதித்துக் காட்டினர்.

அதே கட்டாயத்தை இப்போது மட்டக்களப்பு மேய்ச்சல் தரைப்பிரதேசங்களான மயிலத்தமடு, மாதவனை நிலங்களைக் காப்பாற்றுவதிலும் நாம் காட்ட வேண்டிய சூழ்நிலை வந்திருக்கின்றது. அந்த வரலாற்றுக் கடமையைத் தமிழர்களும் முஸ்லிம்களும் ஒன்றித்து ஆற்றுவதன் மூலம், மட்டக்களப்பு மாவட்டத்தைத் தமிழ்ப் பேசும் மக்களின் மாவட்டமாகத் தக்கவைத்து, கிழக்கையும் பாதுகாக்க இணைவோம்.

# இந்தியக் கடல் பகுதியில் கப்பல் மீது ட்ரோன் தாக்குதல்!



இந்தியக் கடலோரப் பகுதியில் வணிகக் கப்பல் மீது ஆளில்லா விமானம் மூலம் தாக்குதல் நடந்தப்பட்டுள்ளது. இந்த சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இஸ்ரேலுடன் தொடர்புடைய லைபீரிய தேசிய கொடியை தாங்கிய வணிகக் கப்பல் ஒன்று சவுதி அரேபியாவில் உள்ள துறைமுகத்தில் இருந்து கச்சா எண்ணெய் ஏற்றிக் கொண்டு புறப்பட்டுள்ளது.

இந்த கப்பல் இந்திய கடல் எல்லையில் அரபிக் கடலில் சென்றுகொண்டிருந்த போது அதன் மீது ட்ரோன் மூலம் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இதனை ஏ.எப்.பி. செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

இந்தத் தாக்குதலை அடுத்து, கப்பலில் வெடிவிபத்து ஏற்பட்டு தீ பற்றியுள்ளது.

கப்பல் பரவியுள்ள தீ கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ள போதிலும் கப்பலின் இயக்கம் பாதிக்கப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

கப்பலில் பயணம் செய்த அனைவரும் பாதுகாப்புடன் மீட்கப்பட்டுள்ளனர். சம்பவ இடத்தை அண்மித்த பகுதிகளில் உள்ள அனைத்து கப்பல்களுக்கும் இந்த விடயம் தொடர்பில் அறிவிக்கப்பட்டுள்ளதாக இந்திய தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த சம்பவத்தை அடுத்து இந்திய கடலோர காவல் படைக்குச் சொந்தமான கப்பல் ஒன்று 20 பேருடன் அந்த வணிகக் கப்பலை நோக்கி சென்றுள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.

மேலும், கடலோர காவல்படை கப்ப லான ஐ.சி.ஜி.எஸ். விக்ரம், வணிகக் கப்பலை நோக்கி திருப்பிவிடப்பட்டுள்ளது. இந்தத் தாக்குதலுக்கு இதுவரை எந்த அமைப்பும் பொறுப்பேற்கவில்லை. அதேநேரத்தில், இந்தத் தாக்குலுக்கும் ஈரானில் செயல்படும் புரட்சிப் படை அல்லது ஹவுதி தீவிரவாத குழுவுக்கு தொடர்பு இருக்கலாம் என்ற சந்தேகம் எழுந்துள்ளது.

கடந்த மாதம் இந்திய பெருங்கடலில் இஸ்ரேலுக்குச் சொந்தமான சரக்குக் கப்பல் மீது ஈரானிய புரட்சிப் படையா னது ட்ரோன் மூலம் தாக்குதல் நடத்தி யதாக அமெரிக்க அதிகாரி ஒருவர் தெரிவித்திருந்தார். இதில், அந்தக் கப்பல் சேதமடைந்ததாகவும் தகவல் வெளியானது.

இஸ்ரேல் – ஹமாஸ் போரை அடுத்து, ஈரான் ஆதரவு ஹவுதி படை, செங்கடலில் தனது தாக்குதலை அதிகப்படுத்தியது. ஹமாஸ் அமைப்புக்கு எதிராக இஸ்ரேல் தாக்குதல் நடத்தி வருவதால், இஸ்ரேலுக்கு எதிராக தாங்கள் தாக்குதல் நடத்துவோம் என ஹவுதி படை அறிவித்தது. இந்த அறிவிப்பை அடுத்து, இஸ்ரேலுடன் தொடர்புடைய வணிகக் கப்பல்கள் மீது ஹவுதி படையினர் தொடர்ந்து தாக்குதல்களை நடத்தி வருகின்றனர். இதையடுத்து, பல கப்பல்கள் தங்கள் வழித்தடத்தை மாற்றிக்கொண்டுள்ளன.

செங்கடலில் ஹவுதி படையினர் நூற்றுக்கும் மேற்பட்ட ஆளில்லா விமானம் மற்றும் ஏவுகணைத் தாக்குதல்களை நிகழ்ந்தி உள்ளதாக அமெரிக்காவின் வெள்ளை மாளிகை தெரிவித்துள்ளது. 35 நாடுகளைச் சேர்ந்த 10 வணிகக் கப்பல்கள் மீது அவர்கள் தாக்குதல் நடத்தி உள்ளதாகவும் வெள்ளை மாளிகை கூறியுள்ளது.

ஹவுதி படையினரின் பின்னணியில் ஈரானுக்கு ஆழமான தொடர்பு உள்ள தாகவும் அது குறிப்பிட்டுள்ளது. அமெரிக் காவும் அதன் நட்பு நாடுகளும் காசாவில் தொடர்ந்து குற்றங்களை செய்தால் மத்திய தரைக் கடலை பயன்படுத்த முடியாத நிலை உருவாகலாம் என்று ஈரானிய புரட்சிப் படையின் தளபதி கூறியுள்ளார் என செய்தி வெளியாகி உள்ளது.

# ஹைதராபாத்தில் தனியார் மருத்துவமனையில் பாரிய தீ விபத்து; பெரும் உயிர்ச் சேதம் தவிர்ப்பு

ஹைதராபாத்தில் உள்ள தனியார் மருத்துவமனை ஒன்றில் ஏற்பட்ட மின் கசிவு காரணமாக பயங்கர தீவிபத்து ஏற்பட்டது.

தீயணைப்புத் துறை உடனடியாக செயல்பட்டதால் உயிர் சேதங்கள் தவிர்க் கப்பட்டது.

ஹைதராபாத்தின் மெஹ்திபட்டினம் அருகே உள்ள ஜோதிநகர் பகுதியில் உள்ள தனியார் மருத்துவமனை ஒன்றில் நேற்று மாலை திடீரென தீ விபத்து ஏற்பட்டது. மாடியில் ஏற்பட்ட தீ வேகமாக ஏனைய தளங்களிலும் பரவத் தொடங்கியதால் பொலிஸாருக் கும், தீயணைப்புத் துறைக்கும் தகவல் தெரிவிக்கப்பட்டது.

உடனடியாக சம்பவ இடத்துக்கு சென்ற தீயணைப்பு வீரர்கள், துரிதமாக செயல்பட்டு 15 நிமிடங்களிலேயே தீயை கட்டுக்குள் கொண்டு வந்தனர்.



மேலும் தீ விபத்து ஏற்பட்ட தளங்களில் இருந்த நோயாளிகளும் உடனடியாக அங்கிருந்து பாதுகாப்பான இடங்களுக்கு கொண்டு செல்லப்பட்டனர். இதனால் பெரும் உயிர்ச் சேதம் தவிர்க்கப்பட்டதாக அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

இந்த தீவிபத்து தொடர்பாக பொலி ஸார் வழக்குப் பதிவு செய்து விசாரித்து வருகின்றனர். முதற்கட்ட விசாரணையில் மருத்துவமனையின் மாடியில் இருந்த எல்.இ.டி. விளக்குகளில் ஏற்பட்ட மின் கசிவே இந்த தீவிபத்துக்கு காரணம் என தெரியவந்துள்ளதாக பொலி ஸார் தெரிவித்துள்ளனர்.

# உலகளாவிய கொவிட் தொற்றாளர்களின் எண்ணிக்கை 52 வீதத்தால் அதிகரிப்பு




உலகளாவிய ரீதியில் கொவிட் தொற்றாளர்களின் எண்ணிக்கை ஒரு மாதத்தில் 52 சதவீதத்தால் அதி கரித்துள்ளது என உலக சுகாதார ஸ்தாபனம் சுட்டிக்காட்டியுள்ளது.

இந்த விடயம் தொடர்பாக உலக சுகாதார ஸ்தாபனம் மேலும் குறிப்பிடுகை யில்,

புதிய உயிரிழப்புகளின் எண்ணிக்கை 8 வீதத்தால் குறைந்துள்ளதோடு, 3 ஆயிரத்துக்கும் மேற்பட்ட புதிய உயி ரிழப்புகள் பதிவாகியுள்ளன.

கடந்த டிசம்பர் 17 ஆம் திகதி நிலவரத்தின்படி, கொவிட் வைரஸ் பரவல் ஆரம்பித்ததிலிருந்து மொத்தமாக 772 மில்லியனுக்கும் அதிகமான தொற்றாளர்கள் இனங்காணப்பட்டுள் ளதோடு, 7 மில்லியன் உயிரிழப்புகள் பதிவாகியுள்ளது.

மேலும், வைத்தியசாலைகளில் ஒரு லட்சத்து 18 ஆயிரத்துக்கும் மேற் பட்ட புதிய கொவிட் தொற்றாளர்கள் அனுமதிக்கப்பட்டுள்ளனர். 1,600 இற்கும் மேற்பட்டோர் தீவிர சிகிச்சை பிரிவில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

கடந்த 18 ஆம் திகதி வரை கொவிட் வைரஸ் திரிபான பி.ஏ.2.86 ஒமிக்ரோ னின் புதிய துணை வகையான ஜே.என்.1 வைரஸின் பாதிப்பு வேகமாக பரவி வருகிறது. கிடைக்கக்கூடிய சான்றுகளின் அடிப்படையில், ஜே.என்.1வைரஸின் ஆபத்து தற்போது குறைவு என மதிப் பிடப்பட்டுள்ளது.

எனினும், வடக்கு அரைக்கோளத்தில் குளிர்காலம் தொடங்குவதால், ஜே.என்.1 பல நாடுகளில் சுவாச நோய்த்தொற்றுகள் அதிகரிக்கக்கூடும். தொடர்ந்து, ஜே.என்.1 வைரஸ் குறித்து தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருவதோடு, அது இடர் மதிப்பீட்டை தேவைக்கேற்ப புதுப்பிக்கும்.

கொவிட்-19 வைரஸால் பரவும் சுவாச நோய் மட்டுமல்லாது இன்ப் ளுயன்ஸா, ஆர்.எஸ்.வி. மற்றும் குழந் தைகளிடையே நிமோனியா பரவல் ஆகியனவும் அதிகரித்து வருகின்றன.

இதனால் சமூக இடைவெளி, முகக்கவசம் அணிதல், அடிக்கடி கைகளை கழுவி சுத்தம் செய்தல், கொரோனா பரிசோதனை செய்தல் போன்ற வழிமுறைகளை பின்பற்றல் கட்டாயமானது." என அறிவுறுத்தல் வழங்கியுள்ளது.

# தாய்வானுடன் கனடா வர்த்தக உடன்படிக்கை




சீனாவை பகைத்துக் கொள்ளும் வகையில் தாய்வானுடன் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த வர்த்தக உடன்படிக்கையொன்றை கனடா கைச் சாத்திட்டுள்ளது.

இவ்வாறான ஓர் பின்னணியில் தாய்வானுடன் தொடர்புகளை பேணுவது சீனாவுடனான உறவுகளில் விரிசல் நிலை ஏற்படுத்தக் கூடும் என தெரிவிக்கப் படுகின்றது.

வர்த்தக விவகாரங்களை மேம் படுத்தும் நோக்கில் தாய்வானுடன் இந்த உடன்படிக்கை கைச்சாத்திடப் பட்டுள்ளது.

சுயாட்சி நடத்தி வரும் தாய்வானுக்கு கனடா போன்ற மேற்குலக நாடுகள் உதவிகளை வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

தாய்வான் மீது சீனா இராணுவ ரீதியாகவும் அரசியல் ரீதியாகவும் கடு மையான அழுத்தங்களை பிரயோகித்து வரும் பின்னணியில் இவ்வாறு வர்த்த உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டுள்ளது.

எனினும் தாய்வானை சீனா தனி நாடாக அங்கீகரிக்கவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

# அமெரிக்காவில் காலிஸ்தான் ஆதரவு வாசகம் இந்து கோவிலில் எழுதி வைக்கப்பட்டதால் பரபரப்பு

கலிபோர்னியா மாகாணத்தில் இந்து கோயில் ஒன்றின் சுவரில் காலிஸ்தான் ஆதரவு வாசகங்கள் எழுதப்பட்டமை தொடர்பில் அமெரிக்கா கண்டனம் தெரி வித்துள்ளது.

கலிபோர்னியாவின் நெவார்க் நகரில் சுவாமிநாராயண் கோயில் உள்ளது. அதில் காலிஸ்தான் அமைப்புக்கு ஆதர வாக ஸ்பிரே பெயிண்ட் மூலம் வாசகங்கள் எழுதப்பட்டுள்ளன. அத்துடன் பிரதமர் நரேந்திர மோடி மற்றும் இந்தியாவுக்கு எதிரான வெறுப்பு வாசகங்களும் எழு தப்பட்டுள்ளன.

இந்த நிலையில், இந்த சம்பவத்துக்கு அமெரிக்க வெளியுறவுத்துறை எக்ஸ் சமூக வலைதளத்தில் கடும் கண் டனம் தெரிவித்துள்ளது. அதில், "கலிபோர் னியாவில் உள்ள ஸ்ரீசுவாமி நாராயண் இந்து கோவில் மீதான தாக்குதலை வன்மையாக கண்டிக்கிறோம். இதற்கு காரணமானவர்களை கண்டறியும் நோக்கில் நெவார்க் காவல் துறையின் முயற்சிகளை நாங்கள் வரவேற்கிறோம்" என்று கூறப்பட்டுள்ளது.



# டெலிகொம் ஊழியர் பகிஷ்கரிப்பு தற்காலிகமாகக் கைவிடப்பட்டது

கடந்த 09 நாள்களாக ஸ்ரீலங்கா டெலிகொம் நிறுவன ஊழியர்களினால் முன்னெடுக்கப்பட்டுவந்த பணிப் பகிஷ்கரிப்பு தற்காலிகமாகக் கைவிடப் பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையுடன் நடைபெற்ற கலந்துரையாடலின் பின்னர் பணிப்பகிஷ்கரிப்புக் கைவிடப்பட்டதாக இலங்கை அனைத்துத் தொலைத் தொடர்பு ஊழியர் சங்கத்தின் தலைவர் ஜகத் குருசிங்க தெரிவித்துள்ளார்.

டெலிகொம் நிறுவனம் விற்பனை செய்யப்படுவதற்கும் தற்போதைய நிர்வாகத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்தும் இந்த பணிப்பகிஷ்கரிப்பு முன்னெடுக்கப்பட்டது.

ஸ்ரீலங்கா டெலிகொம் நிறுவனத்தை விற்பனை செய்ய வேண்டாம் என வலியுறுத்தி நாட்டின் பல பகுதிகளில் ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்பட்டிருந்தன.




# இன்றும், நாளையும் சிறையில் கைதிகளை உறவினர் பார்வையிடுவதற்குச் சந்தர்ப்பம்

இன்றும் நத்தார் பண்டிகையான நாளையும் சிறை கைதிகளை உறவினர்கள் பார்வையிட சந்தர்ப்பமளிக்கப்பட்டுள்ளது.

சிறைச்சாலை விதிமுறைகள் மற்றும் சுகாதார பாதுகாப்பு நடைமுறைகளை பின்பற்றி நாட்டின் அனைத்து சிறைச்சாலைகளிலும் இந்த நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுவதாக ஊடகப் பேச்சாளர், சிறைச்சாலை ஆணையாளர் காமினி பீ திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

கைதிக்கு தேவையான உணவை மாத்திரமே உறவினர்கள் கொண்டுவர முடியும் என்பதுடன் தடைசெய்யப்பட்ட பொருள்கள் சிறைச்சாலைக்குள் அனுமதிக்கப்படமாட்டாது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, இரு தினங்களும் பொலிஸாருடன் இணைந்து விசேட பாதுகாப்பு வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாக சிறைச் சாலைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

கைதிகளை பார்வையிட அதிகளவானோர் வரக்கூடும் என்பதால் சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் துஷார உபுல்தெனியவினால் அனைத்து சிறைச்சாலை அத்தியட்சகர்களுக்கும் உரிய பணிப்புரை விடுத்துள்ளார் என சிறைச்சாலை ஆணையாளர் காமினி பீ திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.




# வட. - கிழக்கு நிலப்பரப்பை மொழி என்ற அடிப்படையில் பாதுகாக்க முஸ்லிம்கள் தவறினால் அவர்களையும் சேர்த்தே சிங்களம் அழிக்கும்

## ஒன்றித்துப் போராட கஜேந்திரகுமார் பொன்னம்பலம் அழைப்பு

**(கனகராசா சரவணன்)**

முஸ்லிம் மக்கள் குறிவைக்கப்படுவது உறுதி. போர் முடிந்த கையுடன் குறிவைக்கப்பட்ட இனம் தாங்களே என்பதை முஸ்லீம் மக்கள் விளங்கிக் கொள்ள வேண்டும். தமிழ் பேசும் மக்களுடைய வடக்கு, கிழக்கு நிலப்பரப்பின் அடையாளத்தை மொழி என்ற அடிப்படையில் பாதுகாக்கத் தவறினால் அது முஸ்லிம் மக்களையும் சேர்த்துத்தான் அழிக்கும். எனவே மேய்ச்சல்தரை மக்களுடைய போராட்டம் ஒட்டு மொத்தமாக தமிழர்களுடைய போராட்டமாகவும், வடக்கு, கிழக்கு தமிழ் பேசும் மக்களுடைய தாயகமாகவும் பாதுகாக்கப்படுவதற்கு மிக மிக்கியமான புள்ளி என்பதை விளங்கி, அவர்களது பங்களிப்பும் எதிர்காலத்தில் அமைய வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

மட்டு., மயிலத்தமடு – மாதவனை மேய்ச்சல்தரைப் பகுதியில் இருந்து சிங்கள குடியேற்றத்தை வெளியேற்று கோரி பண்ணையாளர்கள் முன்னெடுத்திருக்கும் தொடர் உண்ணாவிரத போராட்டத்தின் நூறாவது நாள் போரட்டதினமான நேற்று சனிக்கிழமை இடம்பெற்ற மாபெரும் ஆர்ப்பாட்டப் பேரணியில் கலந்துகொண்ட அவர், அங்கு ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் இவ்வாறு தெரிவித்தார்.

மட்டு. மேய்ச்சல் தரையான மயிலத்தமடு – மாதவனைப் பண்ணையாளர்களின் பிரச்சினையை ஒட்டு மொத்தமாக சிங்கள மயப்படுத்தலின் கடைசிக் கட்ட நடவடிக்கையாகப் பார்க்கின்றோம். ஏற்கனவே திருகோணமலை அம்பாறை தமிழர்களின் கைகளில் இருந்து நீக்குவதற்கான நடவடிக்கை கடந்த 25 வருடங்களுக்கு முன்னர் ஆரம்பித்தனர். அதில் மிஞ்சி இருந்தது மட்டக்களப்பு மாவட்டம் மட்டும்தான்.

ஆனால் அந்த மாவட்டத்தை இன்று மிக தீவிரமாக வந்து சிங்கள மயப்படுத்துவதற்குரிய வேலைத் திட்டத்தின் முக்கியமான அங்கமாக இந்த மயிலத்தமடு – மாதவனை மேய்ச்சல் தரையில் பண்ணையாளர்களை அப்புறப்படுத்தி, அந்த நிலப்பரப்பை முழுமையாகக் கைப்பற்றி, சிங்களக் குடியேற்றத்தை செயற்படுத்துக்கின்ற செயற்திட்டம் முன்னெடுக்கப்படுகின்றது.

பொருளாராத ரீதியாக அங்கு குடியேற்றப்படுகின்ற சிங்கள மக்களுக்குரிய அடிப்படை வசதிகளும் பொருளாராத ரீதியாக அவர்களை வளர்த்தெடுப்பதற்கான திட்டங்களும் வகுக்கப்பட்டு இன்று நடைமுறையில் வந்து ஒரு முக்கியமான கட்டத்தை அடைந்துள்ளது.

சர்வதேச நிறுவனங்களின் நிதி பங்களிப்போடு மாதுறு ஓயா வலதுகரை வாய்க்கால் அபிவிருத்தித் திட்டம் கனிசமான அளவிற்கு முன்னேறி அந்த திட்டத்தின் கீழ் ஆயிரக்கணக்காக சிங்களக் குடும்பங்களை – குடியேற்றங்களை – கொண்டுவந்து, அந்த அபிவிருத்தி திட்டம் ஊடாக அனைத்து நிலங்களையும் சிங்கள மயமாக்கும் நடவடிக்கைதான் இன்று மேய்ச்சல் தரையில் இருந்து பண்ணையாளர்களை துரத்துகின்ற –,அவர்களது பொருளாதாரத்தை அழிக்கின்ற – ஆரம்பக் கட்டமாக இருக்கின்றது.


ஆகவே இன்று கிழக்கு மாகாணத்தில் தமிழ் என்று நிரூபிக்க கூடிய மட்டக்களப்பு மாவட்டத்தை எக்காரணம் கொண்டும் இழக்க விடக்கூடாது.

அந்த வகையில் சகோதர முஸ்லிம் மக்களிடம் கேட்டுக் கொள்வது இன்று மட்டக்களப்பை நாங்கள் கைவிட்டு, இதனை சிங்கள தேசம் ஆக்கிரமிப்பதற்கு அனுமதிக்கக் கூடாது என்பது தான்.

மேய்ச்சல் தரையில் கால்வைத்து, அங்கு சிங்கள பிரதேச செயலகம் உருவாக்கி, திருகோணமலையில் சேருநுவரவில் நடைபெற்றவாறு குறியேற்றி, எண்ணிக்கை வந்ததின் பிற்பாடு ஏனைய இடங்களில் நுழைவதற்கான அத்திவாரத்தைப் பெறுகின்ற வேலைத்திட்டம் இதுவாகும்.

போர்க் காலத்தில் சிறிலங்கா அரசுடன் நின்ற போதும் கூட, போர்ர் முடிந்த கையுடன் குறிவைக்கப்பட்ட இனம் முஸ்லிம் மக்களே. ஆகவே முஸ்லிம் மக்களும் விளங்கி கொள்ள வேண்டும். தமிழ்ப் பேசும் மக்களுடைய வடக்கு – கிழக்கு நிலப்பரப்பின் அடையாளத்தையும் மொழி என்ற அடிப்படையில் பாதுகாக்கத் தவறினால் அது முஸ்லிம் மக்களையும் சோத்துத்தான் அழிக்கும்.

எப்படி பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரைக்குமான பேரணியை முஸ்லிம் மக்களுடைய செயற்பாடுகளுடன் சேர்த்து உலகத்திற்கு வெளிக் கொண்டு வந்தோமே, அதேபோன்று இந்த மயிலத்தமடு மாதவனை மேய்ச்சல்தரை மக்களுடைய இந்த போராட்டம் ஒட்டுமொத்தமாக இந்த தமிழர்களுடைய போராட்டமாகவும், வடக்கு – கிழக்கு தமிழ்ஒ பேசும் மக்களுடைய தாயகமாக பாதுகாப்பதற்கு மிக மிக்கியமான புள்ளி என்பதை விளங்கி கொண்டு எதிர்காலத்தில் முஸ்லிம் மக்கள் இந்த போராட்டத்தில் பங்களிப்பது அவசியம். – என்றார்.



# திரும்பவும் முகக்கவசம் அணியுங்கள்
## கலாநிதி சந்திம ஜீவந்தர அறிவுறுத்தல்

மக்கள் மீண்டும் முகக்கவசம் அணியவேண்டும் என ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் ஒவ்வாமை, நிர்ப்பீடணம், உயிரணு தொடர்பான கற்கை நிறுவனத்தின் பணிப்பாளர் கலாநிதி சந்திம ஜீவந்தர பொதுமக்களை அறிவுறுத்தியுள்ளார்.

ஜே.என். 1 ஒமிக்ரோன் உப பிறழ்வான புதிய கொவிட் வைரஸ் திரிவு இலங்கையிலும் பரவி வருகின்றமையே இதற்குக் காரணமென அவர் தெரிவித்துள்ளார்.

இதன் விளைவாக இலங்கையில் சளி போன்ற நிலைமை ஏற்படலாம் என அவர் குறிப்பிட்டுள்ளார்.



எவ்வாறாயினும் இது தொடர்பில் தேவையற்ற அச்சம் கொள்ள வேண்டாமெனவும் பேராசிரியர் ச்சந்திம ஜீவந்தர கூறியுள்ளார்.

காய்ச்சல், இருமல், மணமின்மை மற்றும் சுவையின்மை, அதிக வெப்பம், சுவாசக் கோளாறு, உணவு தவிர்ப்பு மற்றும் வாந்தி என்பன ஜே.என். 1 ஒமிக்ரோன் கொவிட் பிறழ்வின் நோய் அறிகுறிகளாக காணப்படுகின்றன.

ஆகவே, இவ்வாறான நோய் அறிகுறிகள் தென்படும் பட்சத்தில் வைத்தியரை நாடுமாறும் கலாநிதி சந்திம ஜீவந்தர பொதுமக்களைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

லக்ஸம்பேர்க் இராச்சியத்தில் கண்டறியப்பட்ட இந்த ஜே.என். 1 ஒமிக்ரோன் உப பிறழ்வு தற்போது இந்தியாவில் பரவி வருகின்றது.

இந்த வைரஸால் இந்தியாவில் இதுவரை பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 2,660 ஐ கடந்துள்ளது.

இந்தியாவின் கேரள மாநிலத்தில் பரவிய இந்த உப பிறழ்வு தற்போது கோவா மற்றும் மகாராஷ்டிரா மாநிலங்களிலும் பரவியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.கொவிட் தொற்றுஒ பரவுவதை கட்டுப் படுத்தத்தே வையான வழிகாட்டுதல் களை பின்பற்றுமாறு இந்திய சுகாதார அதிகாரிகள் மக்களுக்கு அறிவுறுத்தி யுள்ளனர்.

இந்தியாவின் கேரள மாநிலத்தில் பரவி வரும் ஜே.என். 1 கொரோனா பிறழ்வு கவனம் செலுத்தப்பட வேண்டிய வைரஸ் என உலக சுகாதார நிறுவனம் ஏற்கனவே அறிவித்துள்ளது.

# நாட்டில் அந்நிய செலாவணி கையிருப்பு 3.6 பில்லியன் டொலர் வரை அதிகரிப்பு
## அமைச்சர் மனுஷ நாணயக்கார தகவல்

நாட்டின் அந்நிய செலாவணி கையிருப்பு 3.6 பில்லியன் டொலர்களாக அதிகரித்துள்ளதாக தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்புகள் அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அமைச்சர் இதனை கூறியுள்ளார்.

கடந்த வருட இறுதிக்குள் டொலரொன்றின் பெறுமதி 365 ரூபாவாக இருந்தது. தற்போது டொலரொன்றின் பெறுமதியை 320 ரூபாவிற்கு கொண்டு வர முடிந்துள்ளது என மனுஷ நாணயக்கார அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.



அதற்கமைய டொலரின் பெறுமதியை 11 வீதத்தால் குறைக்க முடிந்தது என அவர் தெரிவித்துள்ளார்.

எதிர்மறையான பொருளாதார வளர்ச்சியைக் கொண்ட நாட்டை, சாதகமான பொருளாதார வளர்ச்சிக்கு கொண்டு வந்துள்ளோம். விவசாயம், கைத்தொழில் மற்றும் சுற்றுலாத்துறையை கடந்த வருடத்தை விடவும் மிக உயர்ந்த நிலைக்குக் கொண்டு வர முடிந்துள்ளது எனவும் குறிப்பிட்டுள்ளார்.

மக்கள் கோரிய மாற்றங்களை ஏற்படுத்துவதற்காக அரசாங்கம் பல கொள்கையளவிலான தீர்மானங்களை அமுல்படுத்தியுள்ளதுடன், தொழிலாளர்களுக்கு மதிப்பளிக்கும் வேலைத்திட்டத்தையும் முன்னெடுத்துள்ளதாகவும் நாடு டிஜிட்டல் மயமாக்கப்பட்டு வருவதாகவும் அமைச்சர் மனுஷ நாணயக்கார மேலும் தெரிவித்துள்ளார்.

# விடுதலைத் தேடலில் ஈடுபட்ட தோழர் ரொபேர்ட் சுபத்திரன்

தோழர் ரொபேர்ட் சுபத்திரன் 66 ஆவது பிறந்தநாள் இன்று.

இன்றைய எமது கால சூழ்நிலையில் 20 ஆண்டுகளுக்கு முன்னர் மறைந்த தோழர் ரொபேர்ட் சுபத்திரன் அவர்களின் வெற்றிடம் ஈடு செய்ய முடியாததாக எம்மால் உணரப்படுகிறது.

தேசிய சமூக விடுதலைக்காக தனது இருபதுகளில் போராடப் புறப்பட்டவர் அவர்.

தேசிய விடுதலைக்கும் சமூக விடுதலைக்குமிடையே பெரும் தடை மதில் சுவர்களை எழுப்ப முடியாது என உறுதியாக நம்பியவர்.

தனது மாணவப் பருவத்திலிருந்து மானிட விடுதலைத் தேடலில் ஈடுபட்டவர்.

இடையறாத தத்துவ, கலை, இலக்கிய வாசிப்புடன் ஊரும் உறவும் நட்பும் என அமர்க்களமாக வாழ்ந்தவர்.

தென்மராட்சியின் மண் வாசனை, பேச்சு மொழி, கவித்துவம், நகைச்சுவை உணர்வு, தர்க்கபூர்வமான சிந்தனை என வாழ்ந்தவர்.

தேசிய சமூக அரசியல் பயணத்தை அவர் ஈழ மாணவர் பொது மன்றத்தின் ஊடாக ஆரம்பித்தபோது இயக்கவியல் – வரலாற்று பொருள் முதல் வாதத்தை அவர் கருத்தூன்றி கற்க முயன்றவர்.

மானிட விடுதலைக்கான இயக்கப் பிரவேசத்திற்கு முன்னரே அக்டோபர் புரட்சி வெற்றி பற்றி அவரின் பதின்ம வயதில் அறிந்திருந்தார்.

ஈழ மக்கள் புரட்சிகர அரசியலில் அவர் தீவிர நடைமுறை செயற்பாட்டாளராக இருந்தார். தனது நண்பர்கள், உறவுகளை தோழர்களாக மாற்றினார். சமூக நீதிக்கான போராட்டப் பாரம்பரியங்களில் வந்தவர்களை, வாலிபர்கள், பெண்கள், தொழிலாளர்களை அணி திரட்டுவதில் அவர் துரிதமான செயற்பாட்டளராகக் காணப்பட்டார்.

தேசிய சமூக விடுதலைக்கான புரட்சிப் படை அணி ஒன்றை எழுப்புவதில் அவர் முன்னோடிச் செயற்பாட்டாளர்.

சாதாரண மக்கள் மீது விசுவாசம் கொண்ட அணியைக் கட்டி எழுப்புவதில் காத்திரமான பங்கை வகித்தவர் .

வடக்கு, கிழக்கு, மலையகம், தென்னிலங்கை, உலகமென அவரது பார்வை விசாலமானது.

சமூகத்தில் ஊறிவிட்ட கரடு தட்டி போன பிற்போக்குத்தனங்களை – அதிகார அகங்காரங்களை – மூட நம்பிக்கைகளை – அவர் சமரசம் இன்றி நிராகரித்தார்.

போராட புறப்பட்ட இளம் மனிதர்களுக்கு அவர் இறுதி மூச்சு வரை விசுவாசமாக இருந்தார்.

உலக நிகழ்வுகள், நாட்டு நடப்புகள், கலை இலக்கியம், அரங்காற்றுகை, புதிய அலை இயக்க சினிமா என எல்லாவற்றிலும் தனது ஈடுபாட்டைச் செலுத்தினர்.

அரசின் வதை முகாம்களிலும், சிறையிலும் அவர் சக இயக்கத் தோழர்கள், போராளிகளுடன் ஆழ்ந்த நட்பையும் தோழமையையும் பேணினார்.

கொடிய சித்திரவதை –பாரமான இரும்பு சங்கிலிகளால் பிணைக்கப்பட்டு



இருந்த போதும் – தேசிய சமூக விடுதலைத் தீ அவர் இதயத்தில் குடி கொண்டிருந்தது.

1987 இந்திய – இலங்கை ஒப்பந்தத்தின் பின்னர் சிறையில் இருந்து விடுதலையான பின்னரும் சிறைத் தோழர்களுடன் தோழமை நட்பு, பாதுகாப்பாக அவர்கள் வீடு திரும்ப வேண்டும் என்று கருதி அனைத்து சிறை மீண்ட போராளிகளின் நலன்களையும் தன்னால் இயன்றவரைப் பேணினார்.

அவர் விடுதலையான போது 1986இல் இறுதியில் இயக்கத்தின் செயல்பாடுகள் புலிகளால் முடக்கப் பட்டிருந்தது .

இயக்கம் சின்னா பின்னப்படுத்தப்பட்டிருந்தது. அவர் மனம் தளரவில்லை. பூஜ்ஜியத்தில் இருந்து மேலெழலாம் என்ற நம்பிக்கை கொண்டவர்.

அவர் 1985 ஏப்ரல் அளவில் அரச படையினரால் யாழ் நகரத்தில் வைத்து கைது செய்யப்பட்ட போது அவருடன் மோட்டார் சைக்கிளில் பயணித்து குருநகரை சேர்ந்த போல்டன் குமார் அவர்கள் அரசுப் படையினரின் துப்பாக்கி சூட்டில் உயிரிழந்தார் .

இந்திய இலங்கை ஒப்பந்தத்தின் கீழ் மாகாண சபை முறையை பலப்படுத்தும் செயற்பாட்டின் போது 1988 இல் புலிகளின் துப்பாக்கிச் சூட்டில் அவர் காயமடைந்தபோதும் அயரவில்லை.

தமிழகத்தில் புலம்பெயர்ந்திருந்த 1990களின் முற்பகுதியில் தமிழக முற்போக்கு ஜனநாயக அரசியல் சக்திகளுடனும் கலை, இலக்கிய செயற்பாட்டாளர்களுடனும் தனது பரிச்சயத்தை அதிகரித்துக் கொண்டார் .

1990களின் முற்பகுதியில் இலங்கை திரும்பிய தோழர் ரொபேர்ட் வடக்கு, கிழக்கில்,கொழும்பில் சமூக அரசியல் செயற்பாடுகளுக்கு புத்துயிர் அளிக்க முயன்றார்.

1990களின் நடுப்பகுதிக்கும் பின்னர் யாழ் குடாநாட்டில் ஒரு ஜனநாயக இடைவெளியை ஏற்படுத்துவதற்கான செயற்பாடுகளை ஆரம்பித்தார்.

அரசியல் இயக்கங்கள், கட்சிகள், ஊடகவியலாளர்கள், தொழிற்சங்கங்கள், வாசிக சாலைகள், மாதர் அமைப்புகள், சமூக நீதிக்கான இயக்கங்கள், இதர சமூக செயற்பாட்டாளர்கள் எனப் பலருடனும் உறவை பேணினார்.

யாழ் மாநகர சபை உறுப்பினராக இருந்து கொண்டு அதனை ஒரு ஜன நாயக செயற்பாட்டு க் கருமையமாக செயல்படுத்துவதற்கு சக இயக்கத்தினருடன் இணைந்து அவர் பாடுபட்டார்.

இயலுமானவரை சமூகத்திற்கும் அதன் பயன் கிடைக்க கூடியவாறு மாநகர சபை மற்றும் உள்ளூராட்சி சபைகளில் அங்கத்துவம் வகித்த தோழர்களுக்கு வழி காட்டினர்.

எமது சமூகத்தில் வாராது வந்துற்ற அசாதாரண ஆளுமை அவர்.

சகோதர படுகொலையில் தெரிவு செய்யப்பட்ட உள்ளூராட்சி உறுப்பினர்கள் மாநகர– நகர சபை முதல்வர்கள் கொல்லப்பட்ட போதும் அவர்களைக் கண்ணியப்படுத்தும் விதமாக அஞ்சலி நிகழ்வுகளை முன் நின்று நிகழ்த்தினார்.

மிகக் கடினமான, சிரமமான காலத்தில் வடக்கு – கிழக்கு எங்கும் தோழர்களை அணிதிரட்டி, ஸ்தாபன புனர் நிர்மாணத்திற்குத்தன்னை அர்ப்பணித்தார்.

அவரது ஆளுமை படுகொலைவாதிகளை திகைப்படைய வைத்தது.

2003ஜுலை 14ஆம் தேதி அவர் யாழ் காரியாலயத்தின் மொட்டை மாடியில் உடற்பயிற்சியில் ஈடுபட்டிருந்த போது சினைப்பர் தாக்குதலில் படுகொலை செய்யப்பட்டார் .

தனது 20களில் போராட புறப்பட்ட தோழர் தனது 46 வது வயதில் படுகொலை செய்யப்பட்டார் .

அவரது பயணம் இலட்சிய உறுதியையும் சமூக விடுதலையை சகோதரத்துவம் ஐக்கியத்தை வலியுறுத்தி நிற்கிறது.

தோழர் ரொபேர்ட் போன்று மறைந்த பல்லாயிரம் தோழர்கள், போராளிகள், பொதுமக்களின் சமூக கனவுகள் மெய்ப்பட வேண்டும்.

அவரது தாயார் 1990களில் புலிகளால் உடுத்த துணியுடன் தமிழகத்துக்கு படகு மூலம் வேறு பலருடன் நாடு கடத்தப்பட்டார். பின்னர் அவர் கனடா நாட்டிற்குச் சென்று புத்திர சோகத்துடன் மறைந்தார். அவருடைய தந்தையார் கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டார்.

தான்பிறந்தது இயேசு பாலன் பிறந்த நாளாக்கும் என்று பெருமிதம் பொங்க கூறுவர் .

இன்று அவரது 66 ஆவது பிறந்த நாள்.

**தோழர் சுகு (ஸ்ரீதரன்)**
**தமிழர் சமூக ஜனநாயக கட்சி**



# நாளையும் மறுதினமும் மதுச் சாலைகள் பூட்டு

நாளையும் மறுதினமும் மதுபான சாலைகள் மூடப்படும் என கலால் திணைக்களம் தெரிவித்துள்ளது.

நத்தார் தினத்தை முன்னிட்டு நாளை 25 ஆம் திகதி மதுபானசாலைகள் மூடப்படுகின்றன. ஆயினும், சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையின் அனுமதி பெற்ற நட்சத்திர விடுதிகளுக்கு இது பொருந்தாது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே, போயா தினத்தை முன்னிட்டு அடுத்த நாள் 26 ஆம் திகதி மதுபானசாலைகள் மூடப்படவுள்ளன.

# வெளிநாடுகளுக்கு அனுப்பி வைப்பதாகக் கூறி நிதி அறவிட்டு மோசடி; யாழில் முறைப்பாடுகள்

வெளிநாடுகளுக்கு அனுப்பி வைப்ப தாகக் கூறி, கடந்த இரு வாரத்தில், யாழில் இரண்டரை கோடி ரூபாவுக்கும் அதிகமான பணத்தைப் போலி முகவர் கள் மோசடி செய்துள்ளனர் என பொலிஸ் நிலையங்களில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

யாழ். மாவட்டத்தில் உள்ள பொலிஸ் நிலையங்களில் கடந்த இரண்டு வார கால பகுதிக்குள் 10 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன.

அவற்றின் அடிப்படையில் சுமார் இரண்டரை கோடி ரூபாவுக்கும் மேற்பட்ட பணம் மோசடி செய்யப்பட்டுள்ளது தெரிய வந்துள்ளது.

பாதிக்கப்பட்டவர்கள் சமூக வலைத் தளங்களில் வந்த விளம்பரங்களை நம்பியே பணத்தை இழந்துள்ளனர்.

இது தொடர்பில் பொலிஸார் விசார ணைகளை முன்னெடுத்து வருகின் றனர்.

வெளிநாடுகளுக்கு அனுப்பி வைப்பதாக சமூக வலைத்தளங்களில் பகிரப்படும் விளம்பரங்களை நம்பி பணத்தைக் கொடுத்து ஏமாற வேண் டாம் என பொலிஸார் அறிவித்துள்ள னர்.

# பிரபா பட ரீசேர்ட் அணிந்தவர் தொடர்ந்தும் விளக்கமறியலில்

(த.சுபேசன்)

கடந்த நவம்பர் 27 ஆம் திகதி கொடிகாமம் மாவீரர் துயிலும் இல்லத்திற்கு புலிச் சின்னம் மற்றும் விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனுடைய படம் பொறித்த ரீசேர்ட்டுடன் வந்த இளைஞனைத் தொடர்ந்தும் விளக்க மறியலில் வைக்க சாவகச்சேரி நீதிமன்றம் உத்தர விட்டுள்ளது.

நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இந்த வழக்கு சாவகச்சேரி நீதிமன்றில் எடுக்கப்பட்ட போது எதிர்வரும் 5 ஆம் திகதி வரை தொடர்ந்தும் இளைஞனை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

கொடிகாமத்தைச் சேர்ந்த 24வயதான இளைஞன் ஒருவரே கடந்த மாவீரர் தினத்தன்று புலிச் சின்னம் மற்றும் பிரபாகரனின் படம் பொறித்த ஆடையுடன் தோன்றியமைக்காகப் பின்னர் கைதாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.





# பூநகரியில் இறால் பண்ணைக்கு 49 ஏக்கர் நிலம் வழங்க அனுமதி

(ந.லோகதயாளன்)

பூநகரிப் பகுதியில் ஓர் இறால் பண்ணை அமைப்பதற்காக 49 ஏக்கர் நிலம் வழங்குவதற்கு பிரதேச செயலாளர் அனுமதி வழங்கியுள்ளார்.

கிளிநொச்சி மாவட்டம் பூநகரி பிரதேச பிரதேச செயலாளர் பிரிவில் பரமன்கிராய் என்னும் கிராமத்திலேயே இந்த நிலம் இறால் பண்ணைக்காக வழங்க பிரதேச செயலாளரால் நெக்டா நிறுவனத்திற்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

புத்தளத்தில் தற்போது இயங்கும் சிலோன் அக்குவா பாம் பிறைவேட் லிமிட்டட் என்னும் நிறுவனத்தினர் பண்ணை அமைக்கவே இந்த அனுமதி பிரதேச செயலாளரினால் அளிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு பிரதேச செயலாளர் காணி வழங்குவதற்கு பிரதேச காணிப் பயன்பாட்டுக் குழுவின் ஒப்புதலைப் பெற்றுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

# மியன்மாரில் கைதான மீனவர்களை வழக்குகளின்றி விடுவிக்க முயற்சி!

மியன்மாரில் கைது செய்யப்பட்டுள்ள இலங்கை மீனவர்களை எந்த வித வழக்கும் இன்றி விரைவாக விடுவிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என மியன்மாருக்கான இலங்கைத் தூதுவர் ஜனக பண்டார தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் மியன்மார் உள்துறை அமைச்சுடன் கலந்துரையாடி வருவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட மீனவர்களில் நோயாளிகள் நால்வரும் உள்ளடங்குகின்றனர் என மியன்மாருக்கான இலங்கைத் தூதுவர் கூறியுள்ளார்.

சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபடும் இலங்கை மீனவர்கள் ஒவ்வொரு வருடமும் மியன்மார் அரசாங்கத்தினால் கைது செய்யப்படுகின்றனர் என அவர் சுட்டிக்காட்டினார்.

மியன்மார் கடல் எல்லையை மீறி மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் 02 மீன்பிடிப் படகுகளுடன் 15 இலங்கை மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஒரு மாதத்திற்கு முன்னர் கற்பிட்டி, நீர்கொழும்பிலிருந்து ரயன்புத்தா மற்றும் லோரன்ஸ் ஆகிய மீன்பிடி படகுகள் மூலம் மீன்பிடிக்க சென்ற இந்த மீனவர்கள் கடந்த 02 ஆம் திகதி மியன்மாரில் கைது செய்யப்பட்டனர்.

# தேசிய மின்விநியோகக் கட்டமைப்பில் ஏற்படும் கோளாறுகளைத் தடுப்பது குறித்து ஆராய முடிவு

மின்விநியோக கட்டமைப்பில் ஏற்படும் கோளாறுகளால் தேசிய மின் கட்டமைப்பு பாதிக்கப்படுவதைத் தடுப்பதற்கு மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் மற்றும் முன்மொழிவுகள் தொடர்பில் விசேட கலந்துரையாடலொன்றை முன்னெடுப்பதற்கு பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

கலந்துரையாடலின் பின்னர் உரிய பரிந்துரைகள் இலங்கை மின்சார சபைக்கு அனுப்பி வைக்கப்படும் என அதன் தலைவர் பேராசிரியர் மஞ்சுள பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

கொத்மலை மற்றும் பியகமவுக்கு இடையிலான பிரதான மின்பரிமாற்ற கட்டமைப்பு மின்னல் தாக்கத்துக்கு உள்ளானமையினால் கடந்த 9 ஆம் திகதி நாடளாவிய ரீதியில் மின்சார விநியோகம் தடைப்பட்டது.

கடந்த வாரம் நடைபெற்ற முன்னேற்ற மீளாய்வுக் கூட்டத்தில் இலங்கை மின்சார சபையின் அதிகாரிகள் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவிடம், இந்த நிலைமையைத் தடுப்பதற்கான வசதிகள் தம்மிடம் இருக்கவில்லையெனவும் அதற்கு பாரிய செலவினங்களைச் சந்திக்க நேரிடும் எனவும் கூறியுள்ளனர்.

இதன்படி எதிர்காலத்தில் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு கூடி, முன்மொழிவுகள் தொடர்பில் கலந்துரையாடல் ஒன்றை முன்னெடுப்பதற்கு தீர்மானித்துள்ளது.

இதேவேளை, வார இறுதி நாள்களிலும், பண்டிகை நாள்களிலும் அத்தியாவசியமற்ற பராமரிப்புப் பணிகளுக்காக மின்சார விநியோகம் தடைபடுவதைத் தவிர்க்குமாறு மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர இலங்கை மின்சார சபைக்கு பணிப்புரை விடுத்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# வர்த்தகர் தம்மிக்க பெரேராவுடன் 10 எம்.பிக்கள் இரகசிய சந்திப்பு

வர்த்தகர் தம்மிக்க பெரேராவிற்கும் பத்துநாடாளுமன்றஉறுப்பினர்களுக்கும் இடையில் இரகசிய கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தக் குழுவில் முன்னாள் ஜனாதிபதி ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவர் மைத்திரிபால சிறிசேனவும் உள்ளார் என தெரிவிக்கப்படுகிறது.

இவர்களில் பெரும்பான்மையான எம்.பி.க்கள் நாடாளுமன்றத்தில் சுயாதீனமாக செயற்படுபவர்கள் என தெரிவிக்கப்படுகிறது.

அந்த 10 நாடாளுமன்ற உறுப்பினர்களும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் கீழ் போட்டியிட்டனர் என்பது விசேட அம்சமாகும்.



அவர்கள் தமது அரசியல் எதிர்காலம் குறித்து தம்மிக்க பெரேராவுடன் கலந்துரையாடியுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் அடுத்த ஜனாதிபதி வேட்பாளர் தம்மிக்க பெரேரா என அண்மைய நாட்களில் ஊடகங்களில் செய்திகள் வெளியாகின.

எவ்வாறாயினும், ஜனாதிபதி தேர்தல் அறிவிக்கப்படுவதற்கு மூன்று மாதங்களுக்கு முன்னர் ஜனாதிபதி வேட்பாளரை நியமிப்பதாக அதன் செயலாளர் நாயகம் சாகர காரியவசம் தெரிவித்துள்ளார்.

# பண்டிகைக் காலத்தில் எரிபொருள் தொடர்ச்சியாக விநியோகிக்கப்படும்

எதிர்வரும் பண்டிகைக் காலத்தில் எரிபொருள் விநியோகத்தை தொடர்ச்சியாக முன்னெடுக்குமாறு மின்சக்தி மற்றும் எரிசக்தி இராஜாங்க அமைச்சர் டி.வி.சானக அறிவுறுத்தியுள்ளார்.

இலங்கை பெட்ரோலியக் கூட்டுத்தாபனம், லங்கா ஐ.ஓ.சி. மற்றும் சினோபெக் நிறுவனங்களுக்கு இந்த அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன், அனைத்துச் சந்தர்ப்பங்களிலும் 50 வீதக் கையிருப்பைப் பேணுமாறும் எரிபொருள் நிறுவனங்களுக்கு இராஜாங்க அமைச்சர் அறிவுறுத்தியுள்ளார்.




# கொவிட் வைரஸ் புதிய திரிவு இன்னும் இலங்கையில் கண்டறியப்படவில்லை

## வைத்தியர் தீபால் பெரேரா தெரிவிப்பு

உலகளவில் வேகமாகப் பரவி வருவதாக கருதப்படும் ஜே.என்.1 என்ற கொவிட் - 19 திரிவு இதுவரையில் இலங்கையில் கண்டறியப்படவில்லையென சிறுவர் வைத்திய நிபுணர் வைத்தியர் தீபால் பெரேரா தெரிவித்துள்ளார்.

ஜே.என்.1 என்ற புதிய கொவிட் திரிவு தற்போது உலகளவில் வேகமாக பரவிவருவதாக உலக சுகாதார ஸ்தாபனம் தெரிவித்துள்ளது.

உலகளவில் கொவிட்-19 நோயால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கையும் கடந்த 4 வாரங்களில் 52 சதவீதம் அதிகரித்துள்ளதாக உலக சுகாதார ஸ்தாபனம் தெரிவித்துள்ளது.

எவ்வாறாயினும், இந்த திரிவு இலங்கையில் கண்டறியப்படாத போதிலும், கொவிட்-19 காலத்தில் முன்னதாக பின்பற்றப்பட்ட சுகாதார வழிமுறைகளை பின்பற்றுமாறு சுகாதாரத் துறையினர் அறிவித்துள்ளனர்.

# பொலிஸ் சுற்றிவளைப்புக்கள் தற்காலிகமாக இடைநிறுத்தம்

நாட்டில் இன்று, நாளை மற்றும் 26 ஆகிய மூன்று நாட்களுக்கு 'யுக்திய' பொலிஸ் நடவடிக்கை தற்காலிகமாக நிறுத்தப்பட்டவுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சட்டத்தரணி நிஹால் தல்துவ தெரிவித்தார்.

நத்தார் தினம் மற்றும் பௌர்ணமி தினத்தை முன்னிட்டு பொலிஸ் உத்தியோகத்தர்களை வெவ்வேறு பணிக்காக பயன்படுத்த உள்ளமையால், இந்த நடவடிக்கை தற்காலிகமாக நிறுத்தப்படுவதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அதன் பின்னர் இந்த சுற்றிவளைப்பு நடவடிக்கை மீண்டும் ஆரம்பமாகும் எனப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.



# கொழும்பு, காலியில் திருடப்பட்ட 19 மோட்டார் சைக்கிள்கள் மீட்பு

**(அஸ்ஹர் இப்றாஹிம்)**

நுகேகொடையில் உள்ள வீடொன்றில் மேற்கொள்ளப்பட்ட சோதனையைத் தொடர்ந்து

கொழும்பு, காலி பகுதிகளில் திருடப்பட்ட 19 மோட்டார் சைக்கிள்கள் பல்வேறு இடங்களிலிலிருந்தும் மீட்கப்பட்டுள்ளன.

சந்தேகநபர் ஒருவரின் கைதை அடுத்து இந்த மோட்டார் சைக்கிள்கள் மீட்கப்பட்டமையோடு, இத்திருட்டுகள் தொடர்பாகப் பல்வேறு விடயங்கள் அம்பலமாகியுள்ளன.

கொழும்பு கறுவாத்தோட்டம் மற்றும் பம்பலப்பிட்டி பொலிஸ் பிரிவுகளில் மோட்டார் சைக்கிள் திருட்டுகள் தொடர்பான முறைப்பாடுகள் தொடர்பில் கொழும்பு தெற்கு குற்ற விசாரணைப் பிரிவின் அதிகாரிகள் குழுவும் பம்பலப்பிட்டி பொலிஸ் நிலைய குற்ற விசாரணைப் பிரிவு அதிகாரிகளும் இணைந்து முன்னெடுத்த விசாரணைகளின் அடிப்படையில் இந்த மோட்டார் சைக்கிள்கள் மீட்கப்பட்டுள்ளன.

இதன்படி, விசாரணைகளின் போது கிடைத்த தகவலின் அடிப்படையில் தலபத்பிட்டிய, நுகேகொடை பகுதியில் உள்ள வீடொன்றில் மேற்கொள்ளப்பட்ட சோதனையின் போது திருடப்பட்ட 3 மோட்டார் சைக்கிள்கள், மோட்டார் சைக்கிள்களில் இருந்து அகற்றப்பட்ட 8 பதிவு இலக்கத் தகடுகளுடன் சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபரிடம் மேற்கொள்ளப்பட்ட மேலதிக விசாரணைகளின் போது, காலி, கலஹே பிரதேசத்தில் சந்தேகநபருக்குச் சொந்தமான வீடொன்றில் இருந்து மோட்டார் சைக்கிள் மற்றும் மோட்டார் சைக்கிள்களில் இருந்து அகற்றப்பட்ட 6 பதிவு இலக்கத் தகடுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

சந்தேகநபர் தொடர்பான தடுப்புக் காவல் உத்தரவின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட மேலதிக விசாரணையின் போது, மேல் மாகாணத்தில் கொழும்பு கோட்டை, புறக்கோட்டை, வெலிக்கட, மஹரகம ஆகிய பொலிஸ் பிரிவுகளில் திருடப்பட்ட 9 மோட்டார் சைக்கிள்களும், காலி பொலிஸ் பிரிவில் திருடப்பட்ட 6 மோட்டார் சைக்கிள்களும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

இதன்படி, கண்டுபிடிக்கப்பட்ட மொத்த மோட்டார் சைக்கிள்களின் எண்ணிக்கை 19 எனவும், அந்த மோட்டார் சைக்கிள்களின் பெறுமதி சுமார் ஒரு கோடி 20 லட்சம் ரூபாவாக இருக்கலாம் எனவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

கடந்த வெள்ளிக்கிழமை பம்பலப்பிட்டி பொலிஸ் நிலையத்தில், பதில் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் இந்த மோட்டார் சைக்கிள்களைப் பார்வையிட்டமையுடன், கொழும்பு தெற்குப் பிரிவின் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நெரஞ்சன் அபயகுணவர்தன, பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சட்டத்தரணி நிஹால் தல்துவ உள்ளிட்ட சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகள் பலரும் இதில் கலந்துகொண்டனர்.



# இன்றைய ராசி பலன்கள் - 24.12.2023




இன்றைய நாள் திருப்திகரமாக இருக்காது. அவநம்பிக்கை உணர்வுகள் உங்களை வளரவிடாமல் தடுக்கும். பிறருடன் பேசும் போது கவனமாகப் பேச வேண்டும். கவனக் குறைவான பேச்சுக்களுக்கான வாய்ப்புகள் உள்ளன. தியானம் மேற்கொள்வது பயனளிக்கும்.

பணிச்சூழல் ஊக்கமளிக்கக்கூடியதாக இருக்காது. குறித்த நேரத்தில் பணிகளை முடித்தாலும் பணியில் தவறுகள் காணப்படும்.

உங்கள் மனதில் ஏற்படும் மாறுபாடுகளை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவதன் மூலம் உறவின் நல்லிணக்கம் பாதிக்கப்படும். விஷயங்களை எளிதாக எடுத்துக் கொள்வதன் மூலம் நல்ல பலன்களைக் காணலாம்.

பெருகி வரும் செலவினங்களால் சேமிப்பதற்கான வாய்ப்பு குறைந்து காணப்படும். தேவையற்ற செலவுகள் மிகுந்த கவலையை அளிக்கும்.




இன்றைய நாள் திருப்திகரமாக இருக்காது. அவநம்பிக்கை உணர்வுகள் உங்களை வளரவிடாமல் தடுக்கும். பிறருடன் பேசும் போது கவனமாகப் பேச வேண்டும். கவனக்குறைவான பேச்சுக்களுக்கான வாய்ப்புகள் உள்ளன. தியானம் மேற்கொள்வது பயனளிக்கும்.

பணிச்சூழல் ஊக்கமளிக்கக்கூடியதாக இருக்காது. குறித்த நேரத்தில் பணிகளை முடித்தாலும் பணியில் தவறுகள் காணப்படும்.உங்கள் மனதில் ஏற்படும் மாறுபாடுகளை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவதன் மூலம் உறவின் நல்லிணக்கம் பாதிக்கப்படும். விஷயங்களை எளிதாக எடுத்துக்கொள்வதன் மூலம் நல்ல பலன்களைக் காணலாம்.

பெருகி வரும் செலவினங்களால் சேமிப்பதற்கான வாய்ப்பு குறைந்து காணப்படும்.




இன்றைய நாள் மகிழ்ச்சிக்கான மற்றும் மறக்க முடியாத நினைவுகளை அளிக்கும் நாளாக அமையும். புதிய தொடர்புகள் உருவாக்குவதும் சமூகக் கூட்டங்களில் கலந்து கொள்வதும் உங்களை மகிழச் செய்யும்.

பணிச்சூழல் காரணமாக உங்கள் செயல்பாட்டில் தாமதம் காணப்படும். பணியில் திட்டமிடலும் ஒழுங்கமைத்தலும் வெற்றிக்கு வழிவகுக்கும்.

இன்று எளிதில் கோபத்திற்கு ஆளாவீர்கள். உங்களின் இந்த உணர்வுகளை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவதன் மூலம் உங்கள் துணையுடனான நல்லுறவு பாதிக்கப்படும். மகிழ்ச்சியுடன் இருக்க இத்தகைய உணர்வுகளை கட்டுப்படுத்த வேண்டும்.

பணப்புழக்கம் குறைவாக காணப்படும். கூடுதல் பொறுப்புகள் காரணமாக செலவுகள் அதிகரிக்கும்.




இன்று உங்கள் செயல்களில் விரைந்து முடிவெடுக்க சாதகமான நாள். உங்கள் விருப்பங்கள் நிறைவேறும். பயணங்களால் நல்ல பலன் கிடைக்கும்.

பணியிடத்தில் திறமையுடன் பணியாற்றுவீர்கள். உங்கள் செயல்பாட்டிற்கு மேலதிகாரிகளிடமிருந்து அங்கீகாரம் கிடைக்கும்.

உங்கள் துணையிடம் வெளிப்படையான மகிழ்ச்சியான உணர்வுகளை வெளிப்படுத்துவீர்கள். இருவரும் ஒருங்கிணைந்து மகிழ்வாக இருக்க இது உதவும்.

நிதிவளர்ச்சி மகிழ்ச்சியை அளிக்கும். ஆக்கமான விஷயங்களுக்காக இன்று பணத்தை செலவு செய்வீர்கள்.

நல்ல ஆரோக்கியம் காணப்படும். மனதைரியத்துடன் இருந்தால் நல்ல தேக ஆரோக்கியம் சாத்தியமாகும்.




இன்றைய நாள் துடிப்பான நாளாக இருக்கும். இன்று சந்தோஷமான மனநிலையில் இருப்பீர்கள். உங்களிடம் தலைமை பொறுப்பிற்கான தகுதி காணப்படும். அதனால் உங்கள் தகுதி உயரும்.

பணிச்சூழல் மகிழ்ச்சிகரமாக அனுபவிக்கத்தக்கதாக காணப்படும். குறித்த நேரத்திற்குள் விரைந்து பணியை முடிப்பது உங்கள் தன்னம்பிக்கையை அதிகரிக்க உதவும்.

உங்களின் மகிழ்வான பேச்சு உங்கள் துணையாரை மகிழ்விக்கும். மற்றும் திருப்தியை அளிக்கும் உங்கள் அன்பான அணுகுமுறை உங்கள் துணையுடனான பிணைப்பை வலுவாக்கும்.

இன்று பணம் உபரியாக காணப்படும். இது உங்களுக்கு திருப்தியை அளிக்கும். உங்களால் சேமிக்கவும் முடியும்.

இன்று நல்ல ஆரோக்கியம் காணப்படும்.




உங்கள் செயல்களில் கவனமாக இருக்க வேண்டும். உணர்ச்சிவசப்படுதலை தவிர்க்க வேண்டும். உங்கள் செயல்களில் வெற்றி பெற திட்டமிட்டு செயலாற்ற வேண்டும். முக்கியமான முடிவுகள் எடுப்பதற்கு இது உகந்த நாள் அல்ல.

அதிகமான பணிச்சுமை உங்கள் கவலையை அதிகரிக்கும். பணியில் தவறுகள் நேர வாய்ப்பு உள்ளன.

உங்கள் துணையுடன் நட்புணர்வை பகிர்ந்து கொள்ள வேண்டும். உறவில் நல்லிணக்கத்தை தக்க வைத்துக் கொள்ள இது மிகவும் முக்கியம்.

பணப்பற்றாக்குறை உங்களுக்கு கவலையை அளிக்கும். இன்று அதிகரிக்கும் பொறுப்புகளால் ஏற்படும் செலவினங்களை கையாள்வதை கடினமாக உணர்வீர்கள்.

மனஅழுத்தத்தின் காரணமாக முதுகுவலி ஏற்படலாம்.




இன்று சற்று மந்தமாக காணப்படும். இன்று உங்கள் மனதில் எழும் கேள்விகளுக்கு பதில் கிடைப்பது அரிது. இதனால் குழப்பமான மனநிலை காணப்படும்.

பொறுமையான அணுகுமுறையுடன் பணிகளை மேற்கொள்ள வேண்டியது அவசியம். சகஊழியர்களுடன் சில தொந்தரவுகளை சந்திக்க நேரலாம்.

தொடர்பாடலில் காணப்படும் இடைவெளி காரணமாக துணையுடன் தவறான புரிந்துணர்வு காணப்படும் உங்கள் துணையாரின் கருத்துக்கு முரணான கருத்தை வேறு விதமாக பகிர்ந்து கொள்வீர்கள்.

நிதிநிலைமை ஏமாற்றத்தை அளிக்கும். உங்கள் தேவைகளை பூர்த்தி செய்யவும் கூடுதல் செலவினங்களை கையாளவும் கடன் வாங்க நேரிடலாம்.

மனஅழுத்தம் காரணமாக கால்களில் வலி ஏற்படும்.




இன்று உங்களுக்கு பல வாய்ப்புகள் கிடைக்கும். அதனை பயன்படுத்தி இன்றைய நாளை அனுகூலமாக்கிக் கொள்ளுங்கள்.

இன்று உங்கள் மனதில் பல எண்ணங்கள் உருவாகும். அதன் மூலம் உங்கள் தனித்தன்மையை வெளிப்படுத்துவீர்கள். அதற்குரிய பாராட்டும் பெறுவீர்கள்.

உங்கள் துணையுடன் இன்று தேவையற்ற விஷயங்களுக்காக சூடான வாக்குவாதத்தில் ஈடுபட நேரிடலாம்.

இன்று சேமிப்பு அதிகரிக்கும். உங்கள் கடின உழைப்பிற்கு இன்று கூடுதல் பணவரவும் சலுகைகளும் கிடைக்கும்.

இன்று முழு ஆரோக்கியத்துடன் காணப்படுவீர்கள். ஆரோக்கியத்தில் எந்தவிதமான குறைபாடுகளும் இருக்காது.

# இன்றைய ராசி பலன்கள் - 24.12.2023

**தனுசு**

இன்று வேலைகளை எளிதாகச் செய்ய முடியாத அளவிற்கு கடினமான சூழ்நிலை காணப்படும். திட்டமிட்டு வேலை செய்வதன் மூலம் வெற்றி காணலாம். முக்கியமான முடிவுகள் எடுப்பதை தவிர்க்கவும்.

பணியில் முற்போக்கான பலன்கள் கிடைக்காது. உங்கள் ஆர்வத்தை அதிகரிக்கச் செய்யும் வேறு வேலை மாற்றம் உங்களுக்கு தேவைப்படும்.

உங்கள் துணையிடம் உணர்ச்சிவசப்படுவீர்கள். இது நல்லுறவை மிகவும் பாதிக்கும் எனவே உங்கள் உணர்ச்சிகளை கட்டுப்படுத்துவது மிகவும் நல்லது.

நிதிவளர்ச்சி ஏமாற்றத்தை அளிக்கும். கூடுதலான தேவையற்ற செலவினங்களை சமாளிக்க வேண்டியிருக்கும். இது உங்களுக்கு கவலையை அளிக்கும்.

**கும்பம்**

இன்று உங்கள் பணிகள் முடிக்கப்படாமல் இருக்கும். இன்றைய விளைவுகள் உங்களுக்கு சாதகமாக அமையாது என்ற காரணத்தினால் உங்கள் எதிர்பார்ப்புகளை குறைத்துக் கொள்வது சிறந்தது.

பணியில் முன்னேற்றம் காண நம்பிக்கையுடனும் சாந்தமாகவும் பணியாற்ற வேண்டும். உங்கள் செயல்திறன் மீது உங்களுக்கு அதிருப்தி நிலவும்.

உங்கள் துணையுடன் வெளியிடங்களுக்கோ அல்லது புனித ஸ்தலங்களுக்கோ சென்று மகிழ்வீர்கள். மகிழ்ச்சியான ஒரு நல்ல நிலை காணப்படும்.

பணப்புழக்கம் குறைந்து காணப்படும். இருக்கும் பணத்தை கவனமாக பாதுகாக்க வேண்டும். சேமிக்க வேண்டும். இன்று மிதமான ஆரோக்கியம் காணப்படும். செரிமானம் சம்பந்தமான பிரச்சினைகளால் பாதிக்கப்படலாம்.

**மகரம்**

இன்று செய்யும் அனைத்து செயல்களிலும் நடைமுறை அணுகுமுறையை கையாள வேண்டும். உங்களை உற்சாகப்படுத்திக்கொள்வதன் மூலம் சோர்வை வென்று நம்பிக்கையுடன் இருக்கலாம்.

அதிக பணிச்சுமை கவலையை அளிக்கும். இது பாதுகாப்பற்ற உணர்வை ஏற்படுத்தும். இந்த உணர்வு காரணமாக உங்களால் திறமையாக பணியாற்ற இயலாது.

நீங்கள் விஷயங்களை மிகவும் தீவிரமாக எடுத்துக் கொள்வீர்கள். நல்லுறவிற்கு எதையும் எளிதாக எடுத்துக்கொள்ளும் அணுகுமுறை தேவை. குழப்பமான மனநிலை காரணமாக உங்கள் துணையுடன் விவாதத்தில் ஈடுபடுவீர்கள்.

**மீனம்**

மிகவும் பொறுமையுடன் இருக்க வேண்டும். வாழ்க்கையில் சாதாரணமான அணுகுமுறை வேண்டும். ஆன்மீக காரியங்களில் நேரத்தை செலவழிப்பதன் மூலம் உங்களுக்கு வளர்ச்சி கிடைக்கும்.

பணியில் முன்னேற்றகரமான பலன்கள் காணப்படும். புதிய வேலை வாய்ப்புகள் சாத்தியம். இது உங்களுக்கு மகிழ்ச்சியை அளிக்கும்.

உங்கள் துணையுடன் நன்றாகப் பேசி நட்புணர்வுடன் இருக்க வேண்டும். உறவில் நல்லிணக்கத்தை பராமரிக்க இது அவசியம்.

பணப் புழக்கம் இன்று மகிழ்ச்சியை அளிக்கும் வகையில் இருக்கும். உங்கள் சேமிப்பு அதிகரிக்கும். பணத்தை சரியான முறையில் பயனுள்ள விஷயங்களுக்கு பயன்படுத்துவீர்கள்.

